# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 1981 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க,
## இறைச்சிக்கடைக்காரர் (திருத்தச்) சட்டம்

**[1981, செத்தெம்பர் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

1981, செத்தெம்பர் மாதம் 18 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 20 — தபாற் செலவு : சதம் 50

# 1981 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இறைச்சிக்கடைக்காரர் (திருத்தச்) சட்டம்

[1981, செத்தெம்பர் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 108/78
1346

## இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, இறைச்சிக் கடைக்காரர் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு, "ஐம்பது ரூபாவுக்கு மேற்படாததும், கொடுப்பனவு செய்யத் தவறுமிடத்து மூன்று பஞ்சாங்க மாதங்களுக்கு மேற்படாத காலமொன்றுக்கான ஒன்றில் கடூழிய அல்லது சாதாரண மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்." என்ற சொற்களுக்குப் பதிலாக, பின்வருவனவற்றை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— *272 ஆம் அத்தியாயத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலமொன்றுக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாத காலமொன்றுக்கான, இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்." என்ற சொற்களுக்குப் பதிலாக, பின்வருவனவற்றை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"முந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலமொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

ஏ 57767—6,950 (07/81)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 60; (வெளிநாடு) ரூபா 80; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த.பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.